# பொதுக்காலம் 31ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

மனமாற்றம் அடைபவரை இறைவன் மகிழ்விக்கிறார் என்பதை எடுத்துரைக்கும் பொதுக்காலம் 31ம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடனே வரவேற்கின்றோம். இயேசுவைக் காண விரும்பிய சக்கேயுவிற்கு அவரையே விருந்தோம்பும் கொடையைத் தந்து ஆசீர்வதிக்கிறார். நாமும் அவரைக் காண விரும்புவோம். நல்மாற்றங்களை நம்முள் பெறுவோம்

இன்றைய முதல் வாசகத்தில், தம் படைப்பு அனைத்தின் மீது இறைவன் இரக்கம் காட்டுகிறார் என்பதை சாலமோனின் ஞான நூல் எடுத்துரைக்கின்றது. இறைவன் நம்மை அன்பு செய்கின்றார். இரக்கம் காட்டி வாழ்வளிக்கிறார். இறை இரக்கம் நம் பாதையை மாற்றிக்கொண்டு தீமையில் இருந்து விடுபடவே என்கின்றார் இறைவன்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், “இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று!” என்று சக்கேயுவை ஆசீர்வதிப்பதை லூக்கா நற்செய்தி எடுத்தியம்புகிறது. தன் உருவத்தினால் இயேசுவைக் காணமுடியாது என்று அறிந்த குள்ள சக்கேயு, இயேசுவைக் காணும் ஏக்கத்தினால் அத்தி மரத்தில் ஏறுகிறார். இறைவன் மீது தாகம் ஏற்பட்டது. இயேசுவின் மீட்பு சக்கேயுவுக்குக் கிடைத்தது. மனமாற்றத்தைக் கொண்டு வந்தது. பாவம் மன்னிக்கப்பட்டு மீட்பு கிடைத்தது. நாமும் சக்கேயு போல உடல், உள்ள குறைகளை மறந்து அவரை நாடித் தேடுவோம்; மீட்பை பெற்றுக் கொள்வோம் என்ற விசுவாசத்தோடு இப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. மீட்பின் வாயிலே எம் இறைவா!

எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் இறை இரக்கத்தின் தூதுவர்களாகத் திகழ்ந்து, மக்களை மனமாற்றத்தின் பாதையில் வழிநடத்தி, மீட்பின் பாதையில் சேர்த்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. பாவிகள் மனம் திரும்பும் பொருட்டு பார்த்தும் பாராமல் இருப்பவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அலுவலர்கள் நாட்டு மக்களை கஷ்டப்படுத்தும் பணிகளை, வரிகளைச் சுமத்தாமல், இயற்கையோடு இணைந்த பாதையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி அமைத்து தரவேண்டும் என உம்மை மன்றாடுகின்றோம்.

3. சக்கேயுவை ஆசீர்வதித்தவரே எம் இறைவா!

இயேசுவைக் காண சக்கேயு கொண்டிருந்த ஆர்வத்தை எங்களுக்கும் தந்தருளி, அனைத்து நிகழ்வுகளிலும் உம்மையே முதன்மைப்படுத்தி, எம் சமூக உறவுகளில் பகிர்ந்து கொள்ள வேண்டியவற்றை எமக்கு நினைவுறுத்தி நல் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

4. வரங்களை பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதியில் பொழியும் மழைக்காக நன்றி இறைவா! மழைநீர் முறையாக பராமரித்து சேமிக்கப்படவும், நீர்நிலைகள் முறையாகப் பேணி விவசாயம் மேம்படவும், குடும்பங்களில் சமாதானம், மகிழ்ச்சி நிறைந்து இருக்கவும், கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்று மகிழவும் வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com